**අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**கல்வி அமைச்சு**

**Ministry of Education**

'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ
බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte
Battaramulla.
පාසල් කටයුතු ශාඛාව

දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary: 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, **Fax**: 2784846
ඊමේල්/ஈ – மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk


ඔබේ අංකය / உமது இல. / Your No. ……………………….

මගේ අංකය / எமது இல. / My No. ED/01/12/05/08

දිනය / திகதி / Date 2017.06.01

**சுற்றுநிருப இலக்கம் : 23/2017**

மாகாணப் பிரதான செயலாளர்கள்,
மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
கோட்டத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
அதிபர்கள், பிரிவேனாக்கள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் அதிபர்கள்.

## பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் 06 தொடக்கம் 13 வரையிலான தரங்களுக்கு 2017 ஆம் ஆண்டும் அதன் பின்னரும் நடைமுறைப்படுத்தல்.

கல்வி மறுசீரமைப்பு மற்றும் காலத்திற்கு ஏற்ற போக்குக்களை அடிப்படையாகக் கொண்டு மிக வினைத்திறன் மிக்கதாக கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளை வலுப்படுத்துவதனை இலக்காகக் கொண்டு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் 2017 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய வடிவமைப்பில் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. இந்த வேலைத்திட்டத்தை திட்டமில், ஒழுங்கமைத்தல் மற்றும் செயற்படுத்தல் போன்றன பாடசாலையினால் மேற்கொள்ளப்படுவதோடு முன்னெடுப்பும் மேற்பார்வையும் கல்வி அமைச்சின் இடையீட்டோடு தேசிய கல்வி நிறுவகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வித் திணைக்களங்களால் மேற்கொள்ளப்படும்.

02. அதன்படி 06 – 13 ஆம் தரங்களில் பாடசாலையினை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் காலம் தோறும் இதுவரை விநியோகிக்கப்பட்ட அனைத்து சுற்றறிக்கைகளை மேவி 2017.06.01 தொடக்கம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக இந்தச் சுற்றறிக்கையின் விதிமுறைகள் வலுவில் இருக்கும். அதன்படி 2017 ஆம் ஆண்டு நடைபெறும் க.பொ.த. (உ/த) பரீட்சை மற்றும் க.பொ. (சா/த) பரீட்சையின் போதெ இந்த புதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

03. பாடசாலையையொட்டிய கணிப்பீடு தொடர்பாக 06 – 09 ஆம் தரங்களுக்குரிய அறிவுறுத்தல் தேசிய கல்வி நிறுவனத்தாலும் 10 - 13 ஆம் தரங்களுக்கான அறிவுறுத்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தாலும் வழங்கப்பட்டுள்ளதோடு இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான அனைத்து படிமுறைகளும் கல்வி அமைச்சின் விடயங்களுக்குப் பொறுப்பான பணிப்பாளர்கள்,

மாகாணக்கல்விப் பணிப்பாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

04. நடைமுறைப்படுத்தல்

தரம் 06 தொடக்கம் தரம் 13 வரை அனைத்து தரங்களிலும் கற்பிக்கப்படும் அனைத்துப் பாடங்களுக்கும் இந்த வேலைமுறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

தரம் 06 தொடக்கம் 13 வரையான மாணவர்கள் கற்கும் ஒவ்வொரு பாடங்களுக்கும் பாடசாலை தவணைக்கு ஒரு கணிப்பீட்டுச் செயற்திட்டம் என்பதாக நடைமுறைப்படுத்தப்படல் கட்டாயமானதாகும் இந்த கணிப்பீட்டு முறைமை மாணவரில் காணப்படும் ஆற்றல் முறையாக இனங்கன்டு அவர்களை எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சி மட்டத்தை அண்மிப்பதற்கு தேவையான பின்னூட்டலை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் செயன்முறைப்படுத்தப்படுவதால் ஆசிரியர்களின் விருப்புக்கமைய அதற்கு மேலதிகமாக கணிப்பீட்டு சந்தர்ப்பங்களை நடைமுறைப்படுத்த முடியுமாகும்.

05. சான்றுறுதிப்படுத்தலுக்காக உபயோகிக்க வேண்டிய கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை.

5.1. பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலை முறைமை 06 – 09 தரங்கள் (வருட இறுதி முன்னேற்ற அறிக்கையில் குறிப்பிடபட வேண்டியமைக்காக)

| விபரம் | தேர்ச்சி மட்டத்தை பரீட்சிப்பதற்காக ஒவ்வொரு தவணையிலும் உரித்தாக்கப்படும் கணிப்பீட்டு தவணை எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | தரம் 06 | தரம் 07 | தரம் 08 | தரம் 09 |
| சமயம் (பௌத்தம்/ சைவநெறி/ கத்தோலிக்கத் தர்மம்/ கிறீஸ்தவ தர்மம்/ இஸ்லாம்) | 1 | 1 | 1 | 1 |
| சிங்களம்/ தமிழ் மொழி | 1 | 1 | 1 | 1 |
| ஆங்கிலம் | 1 | 1 | 1 | 1 |
| கணிதம் | 1 | 1 | 1 | 1 |
| வரலாறு | 1 | 1 | 1 | 1 |
| புவியியல் | 1 | 1 | 1 | 1 |
| வாழ்க்கைத் தேர்ச்சி மற்றும் குடியுரிமைக் கல்வி | 1 | 1 | 1 | 1 |
| விஞ்ஞானம் | 1 | 1 | 1 | 1 |
| பிரயோக மற்றும் பொறியியல் நுட்பத் திறன் | 1 | 1 | 1 | 1 |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 1 | 1 | 1 | 1 |
| இரண்டாம் தேசிய மொழியாக சிங்களம்/ தமிழ் | 1 | 1 | 1 | 1 |

5.2. க.பொ.த (சா.த) பரீட்சையின் சான்றுகை படுத்துவதற்காக -

தரம் 10 இன் முதலாம் தவணை, இரண்டாம் தவணை மற்றும் மூன்றாம் தவணை, தரம் 11யின் முதலாம் தவணை, இரண்டாம் தவணை ஆகிய 05 தவணைகளிலும் கணிப்பீட்டுப் புள்ளிகள் தேர்ச்சி மட்டம் தீர்மானித்தலுக்காக பயன்படுத்திக் கொள்ளப்படும்.

ஒவ்வொரு பாடத்துக்காக ஒவ்வொரு தவணையிலும் மேற்கொள்ள வேண்டிய கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் க.பொ.த (சா/த) தர தேர்ச்சி மட்டம் தீர்மானிக்கப் படுவதற்காக தரம் 10 மற்றும் 11யில் பெற்றுக்கொள்ளும் கணிப்பீட்டுச் சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை கீழ் வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பாடம் | க.பொ.த (சா/த) தர தேர்ச்சி மட்டம் தீர்மானிக்கப் படுவதற்காக தவணையில் உரித்தாக்கிக் கொள்ள வேண்டிய கணிப்பீட்டுத் தவணையின் எண்ணிக்கை | க.பொ.த (சா/த) தேர்ச்சி மட்டம் தீர்மானிக்கப்படுவதற்கு 10 மற்றும் 11 ஆம் தரங்களில் பெற்றுக் கொள்ளும் மொத்த கணிப்பீட்டுத் தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சமயம் | 1 | 5 |
| முதல்மொழியும் இலக்கியமும் | 1 | 5 |
| ஆங்கிலம் | 1 | 5 |
| கணிதம் | 1 | 5 |
| விஞ்ஞானம் | 1 | 5 |
| வரலாறு | 1 | 5 |
| 1ஆம் தொகுதி பாடம் | 1 | 5 |
| 2ஆம் தொகுதி பாடம் | 1 | 5 |
| 3ஆம் தொகுதி பாடம் | 1 | 5 |

5.3. க.பொ.த (உ/த) பரீட்சை சான்றுகைப் படுத்தலுக்காக 12 ஆம் தரத்தில் முதலாம் தவணை, இரண்டாம் தவணை மற்றும் மூன்றாம் தவணை 13 ஆம் தரத்தின் முதலாம் தவணை மற்றும் இரண்டாம் தவணைகளின் கணிப்பீட்டுப் புள்ளி மற்றும் குழுச்செயற்பாட்டுப் புள்ளி என்பன தேர்ச்சி மட்டத்தைத் தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்படும்.

ஒவ்வொரு பாடத்திற்காக ஒரு தவணையுள் மேற்கொள்ள வேண்டிய கணிப்பீட்டுத் தடவைகளின் எண்ணிக்கை மற்றும் க.பொ.த (உ/த) தர தேர்ச்சி மட்டத்தை தீர்மானிப்பதற்காக 12 மற்றும் 13 ஆம் தரங்களில் பெற்றுக் கொள்ளும் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| பாடம் | க.பொ.த (உ/த) தேர்ச்சி மட்டத்தை தீர்மானிப்பதற்காக ஒரு தவணையில் ஒவ்வொரு பாடங்களும் உரித்தாக்கப்படும் கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | க.பொ.த. (உ/த) தேர்ச்சி மட்டத்தை தீர்மானிப்பதற்காக 12 மற்றும் 13 ஆம் தரங்களில் பெற்றுக்கொள்ளப்படும் மொத்த கணிப்பீட்டு சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அனைத்துப் பாடங்களும் | 1 | 5 |
| குழு செயற்பாடுகள் | - | 1 |

இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பில் மேலதிக ஆலோசனை தேசிய கல்வி நிறுவகத்தாலும் பரீட்சைத் திணைக்களத்தாலும் எதிர்காலத்தில் வெளியிடப்படுவதோடு அந்த அறிவுறுத்தல்களுக்கமைய இவ் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்தத் தேவையான அனைத்து படிமுறைகளும் உங்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

06. க.பொ.த (உ/த) வகுப்புக்களுக்கு உள்வாங்கப் படுவதற்காக பொதுவான தகமைகளின் கீழ் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு மட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளல். சுற்றறிக்கை இலக்கம் 2008/17 2.1 மற்றும் 2.3 அறிவுறுத்தல்களின் கீழ் காட்டப்பட்டுள்ள காட்டப்பட்டுள்ள தேவையான பொதுத்தகமைகளின் தேவைகளுக்கமைய தேவையான திறமைச் சித்தி 3 இல் ஒன்று குறைவான சந்தர்ப்பத்தில் மட்டுமே க.பொ.த (சா/த) எழுத்துப் பரீட்சையில் திறமைச்சித்தி பெற்று அப்பாடத்திற்கு பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் திறமைச்சித்தி பெற்று அப்பாடசாலைக்கு பாடசாலையை

அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் திறமைச்சித்தி அல்லது அதற்கு மேலான தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொண்டிருந்தால் அது ஒரு திறமைச்சித்தியாக கருத்திற் கொள்ளப்படும். எனினும் இது மொழி மற்றும் கணிதப்பாடங்களுக்குப் பொருந்தாது. க.பொ.த (உ/த) பரீட்சைக்கு 2 ஆம் தடைவை தோற்றி திறமைச்சித்திகளின் தேவையை பூர்த்தி செய்யமுடியாத விண்ணப்பதாரிகளுக்கு அவர்கள் முன்பு தோற்றிய தடவையின் பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட கணிப்பீட்டின் கீழ் தேர்ச்சி மட்டத்திற்குரியவாறாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

07. **கண்காணிப்பு.**

இவ்வேலைத்திட்டத்தைக் கண்காணிப்புச் செய்வது உள்ளக மற்றும் வெளியக முறைகளில் செய்தல் வேண்டும்.

7.1 உள்ளக கண்காணிப்பு

7.1.1. பாடசாலை மட்டக் கண்காணிப்பு

அதிபர், பிரதி அதிபர் (கல்வி அபிவிருத்தி) மற்றும் பிரிவுத்தலைவர்கள் உள்ளடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்படும்.

7.2. வெளியகக் கண்காணிப்பு

7.1.2. வலய/ கோட்ட மட்டக் கண்காணிப்பு

வலயக் கல்விப் பணிப்பாளர், வலய பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்படும்.

7.2.2. மாகாண மட்டக் கண்காணிப்பு

மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாண பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்படும்.

7.2.3. தேசிய மட்டக் கண்காணிப்பு

கல்வி அமைச்சின் உரிய மேலதிக செயலாளர்களின் முன்னெடுப்பு மற்றும் பாடங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர்களின் கீழ் நியமிக்கப்படும் குழுவினால் மேற்கொள்ளப்படும்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள் :-

01. தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு
02. சகல மேலதிக செயலாளர்கள் - கல்வி அமைச்சு
03. பரீட்சை ஆணையாளர் நாயகம் - இலங்கை பரீட்சைத்திணைக்களம்
04. பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
05. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
06. பிரதம ஆணையாளர்- ஆசிரியர் கல்வி நிர்வாகம் மற்றும் கல்வியல் கல்லூரிகள் கிளை